| O.S.No. 80/2024 | PW2: திரு. ஸ்ரீதர் த/பெ. திரு. தனசேகரன் | 02-09-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் வங்கியில் 10 வருடங்களாக அப்பரைசராக பணி செய்கிறேன். வாதியையும், பிரதிவாதியையும் எனக்கு நன்கு தெரியும். 1—ம் பிரதிவாதியின் கணவர் கங்காதரனை எப்படி தெரியும் என்றால் அவர் வாதியின் உறவினர் ஆவார். 1—ம் பிரதிவாதி இறந்த கங்காதரனின் மனைவி ஆவார். வாதியின் மகன் என்னுடன் படித்த வகையில் வாதியை எனக்கு தெரியும்.

2. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் கங்காதரன் வாதியிடம் ரூ.4,00,000/— கடன் வாங்கினார், அதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியிடம் கங்காதரன் மேற்படி கடனை வாங்கும் சமயத்தில் நான் இருந்தேன். கடன் கொடுத்தபோது காலையில் சுமார் 11.00 மணி இருக்கும். நான் அன்றைய தினம் வங்கியில் பணியில்தான் இருந்தேன், தற்காலிக பணி என்பதால் அன்றைய தினம் வாய்மொழியாக அனுமதி பெற்று சென்றேன். வாதி அன்பழகன் என்னை பாண்டு எழுத வர சொன்னார், அதனால் நான் அன்றைய தினம் சென்று பாண்டு எழுதிக்கொடுத்தேன்.

3. வா.சா.ஆ.1 பாண்டு எழுதும்போது கங்காதரனும், 1—ம் பிரதிவாதியும் இருந்தார்கள். அந்த சமயத்தில் வாதியின் நண்பர் தனசேகரன் என்பவரும் இருந்தார், அவர்தான் பாண்டில் சாட்சி கையெழுத்து போட்டார். வா.சா.ஆ.1 பாண்டினை வாதி சொல்லிதான் எழுதினேன். பாண்டில் 2 ரூபாய் வட்டி என்று எழுதினேன். பணம் ரூ.4,00,000/— ஆன்லைன் மூலமாக கொடுக்கப்பட்டதா, பணமாக

கொடுக்கப்பட்டதா என்றால் பணமாகத்தான் கொடுக்கப்பட்டது. பணம் கொடுத்தபோது 1-ம் பிரதிவாதியும் சேர்ந்துதான் வாங்கினார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் அந்த இடத்தில் இருந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றாலும், அதற்கு மாறாக குறுக்கு விசாரணையில் அன்பழகன் அழைத்ததால் வங்கியிலிருந்து சென்று எழுதிக்கொடுத்தேன் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. வா.சா.ஆ.1 பாண்டு எழுதிய நாளானது ஞாயிற்றுக்கிழமை என்றாலும், அதனால் நான் வங்கியிலிருந்து சென்று பாண்டு எழுதிக்கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் 5 வருடம் ஆகிவிட்டதால் எனக்கு சரியாக கிழமை ஞாபகமில்லை. நான் பாண்டு எழுத சென்றபோது அந்த இடத்தில் தனசேகரன் இருந்தார். வாதிக்கும் இறந்த கங்காதரனுக்கும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றாலும், வாதியின் மகனுடைய நண்பர் நான் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.09.02 13:35:02 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**